# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1945/40 - 2015 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.12.18

*1945/40 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 418/1*

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1/1.*

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ், 2015, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு கருணாரத்ன பரணவிதானகே அவர்கள் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, திசெம்பர் 18.

1- 264/2

---

*2015 இன் இல. 418/2*

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ், நியமனம் செய்யப்பட்டு 2015, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1932/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் அமைச்சரின் அமைச்சர் பதவியானது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், 2015, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, அவரின் பெயருக்கு முன்னால் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மாண்புமிகு மனோ கணேஷன், பா. உ. அவர்கள் - "தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சராக".

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, திசெம்பர் 18.

1- 264/3

*2015 இன் இல. 418/3*

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ், நியமனம் செய்யப்பட்டு 2015, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1932/69 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காணும் இராஜாங்க அமைச்சரின் இராஜாங்க அமைச்சர் பதவியானது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், 2015, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, அவரின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பியங்கர ஜயரத்ன, பா. உ. அவர்கள் - "சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக"*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பி. பீ. அபேகோன்,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2015, திசெம்பர் 18.*

*1- 264/4*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/24/1.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45 (1) ஆம் உறுப்புரையின் கீழ், உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு கருணாரத்ன பரணவிதானகே அவர்கள், 2015, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து அரசியலமைப்பின் 46 (3) (ஆ) ஆம் உறுப்புரையின் கீழ் சொல்லப்பட்ட பிரதி அமைச்சர் பதவியிலிருந்து கேட்டு விலகியுள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பி. பீ. அபேகோன்,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2015, திசெம்பர் 18.*

*1- 264/1*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*